செ.வெ.எண்: 694 /2016 நாள்: 03.10.2016

**கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் அரசியல் கட்சிகளுக்கு சாதாரண உள்ளாட்சித்தேர்தல் 2016-ஐ முன்னிட்டு பொது இடங்கள், அரசு கட்டிடங்கள் மற்றும் சுவர்களிலிருந்தது அரசியல் விளம்பரங்களை நீக்குதல் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவரின் நாளிதழ் செய்திக்குறிப்பு**

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறவிருக்கம் சாதாரண உள்ளாட்சித்தேர்தல் 2016-ஐ முன்னிட்டு மாநில தேர்தல் ஆணையத்திடமிருந்து பொது இடங்கள்,அரசு கட்டிடங்கள் பொதுச்சுவர்கள் மற்றும் மற்றம் தனி நபர்களின் வீடுகள் / சுவர்களிலிருந்தம் அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்ட சுவர் எழுத்துக்கள் சுவரொட்டிகள் மற்றும் தாள்களை அதை நிறுவிய அரசியல் கட்சி /வேட்பாளர் முலமே அகற்ற நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மேற்படி அறிவுரைகளை பின்பற்றவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து அரசியல் கட்சிகளும் நகராட்சி, பேருராட்சி, மற்றும் கிராம ஊராட்சிகளுக்குட்பட்ட பொது இடங்கள்,அரசு கட்டிடங்கள் பொதுச்சுவர்கள் மற்றும் தொடர்புடைய அனைத்து இடங்களிலிருந்தும் அரசியல் கட்சிகள் /வேட்பாளர்கள் சம்பந்தப்பட்ட சுவரெழுத்தக்கள் சுவரொட்டிகள் மற்றும் தாள் விளம்பரங்களை தேர்தல் ஆணையத்தின் ஆணைகளுக்கட்பட்டு நீக்க நடவடிக்கை எடுக்க அனைத்து சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுச்சுவர்கள் மற்றம் தனிநபர்களின் சுவர்களிலிருந்தும் அனைத்துவிதமான அரசியல் விளம்பரங்களை அகற்ற துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டுப்பாடுகளை பின்பற்றாத அரசியல் கட்சிகள்/ மற்றும் வேட்பாளர்கள் மீது தமிழ்நாடு திறந்தவெளி (உருக்குலைப்பு தடுப்பு) சட்டம் 1959 மற்றும் இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே,கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மேற்படி தேர்தல் ஆணையத்தின் விதிகளை முழுவதுமாக பின்பற்றவும் இதன்முலம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நகராட்சி, பேருராட்சி, மற்றும் கிராம ஊராட்சிகளுக்குட்பட்ட பொது இடங்கள், அரசு கட்டிடங்கள், பொதுச்சுவர்கள் மற்றும் தனிநபர்களின் வீடுகள் சுவர்கள் ஆகியவற்றிலிருந்து சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்களை அகற்றிட முழு மனதுடன் ஒத்துழைப்பு வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

**உண்மை நகல் உத்தரவுப்படி**

மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர் (தேர்தல்),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.